Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 2060/2025 |
| Police station | : | நெல்லிக்குப்பம் P.S |
| Deposition of witness for Prosecution | : | LW 4 / PW3 |
| Name | : | பாலாஜி காவல் ஆய்வாளர் ஓய்வு |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 02.04.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(1 ,2 எதிரிகள் ஆஜர். ).

<u>**முதல் விசாரணை:**</u>

நான் புதுச்சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து கடந்த 2023ம்ஆண்டு பணி ஓய்வு பெற்று தற்போது கடலூாரில் வசித்து வருகிறேன். வழக்கு சமயத்தில் நான் நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தேன். கடந்த 18.07.2020ம் தேதி நானும் நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் பணி புரிந்த தலைமை காவலர் திரு. கலியன் மற்றும் திரு. சம்பத் ஆகியோர்கள் பார்ட்டி சகிதம் சுற்று காவல் பணியாக காலை 6.00 மணியளவில் விஸ்வநாதபுரம் பென்னை ஆற்றின் கரை அருகே வரும்போது அங்கு இரு சக்கர வாகனத்தில் முன் பகுதியில் ஒரு மூட்டையுடன் இருவர் வந்தவர்கள் எங்களை கண்டதும் வாகனத்தை போட்டு விட்டு ஓட முயற்சி செய்தவர்களை நாங்கள் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அந்த மூட்டையில் ஆற்று

மணலும் இரு சக்கர வாகனம் PY-01-AQ-1523 என்ற பதிவெண்டகொண்ட ஸ்பெண்டர் பிளஸ் வாகனம் இருந்து. அவர்கள் இருவரையும் விசாரித்தபோது வாகனத்தை ஓட்டி வந்த நபர் வைடிப்பாக்கம் நாகூரான் என்பதும் பின்னால் அமர்ந்து வந்த நபர் விஸ்வநாதபுரத்தை சேர்ந்த ரவீந்தரன் என்பதும் தெரியவந்தது. அவர்கள் இருவரும் எடுத்து வந்த தென்பென்னை ஆற்று மணல் மூட்டைக்கு எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் திருட்டு தனமாக கொண்டு வந்தது தெரியவந்தது. இதனால் நீர் நிலை குறையும் ஆற்று மணல் வளம் குறையும் என்று தெரிந்தும் மணல்களை திருடி வந்ததை கூறி காலை 6.10 மணிக்கு கைது செய்தும் 6.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் மேற்கூறிய காவலர்கள் முன்னிலையில் தயார் செய்தும், தடயத்தை கைப்பற்றியும் பின்னர் 7.30 மணியளவில் காவல் நிலையம் வந்து எதிரிகள் இருவர் மீதும் நிலைய குற்ற எண் 1182/2020 சட்டப் பிரிவுகள் 430, 379 இதசவின் உடன் இணைந்த 21(1)M&M Act படி வழக்கு பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் திரு. கலியன் மற்றும் திரு சம்பத் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலம் தடயத்தை படிவம் -95 மூலம் சா.பொ. 210/2020 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **மேற்படி படிவம் 95 அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரிகளை உரிய நடைமுறைக்கு பின் உரிய வழிக்காவல் துணை மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 24.07.2020 ம் தேதி கைப்பற்றப்பட்ட தென்பென்னை ஆற்று மணலை கடலூர் நீர் வள உதவி பொறியாளர் அவர்களுக்கு சான்று பெற அனுப்பிவைத்தேன். அவர் ஆய்வு செய்து கைப்பற்றப்பட்ட மணலானது 0.02 யூனிட் என்றும் அதன் மதிப்பு ரூ. 40/- என்றும் சான்று வழங்கினார். **மேற்படி கடலூர் நீர் வள உதவி பொறியாளர் அளித்த சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( இந்த ஆவணத்தை இந்த சாட்சியின்**

**மூலம் குறியீடு செய்ய எதிரி தரப்பில் ஆட்சேபனை இல்லை என்பதால் கு.வி.மு.ச. சட்டப் பிரிவு 294(2)ன் படி குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி ஆய்வு செய்த உதவி பொறியாளர் திரு. தாமோதரன் என்பவரை விசாரணைசெய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சட்டப் பிரிவை 379, 430 இதசவின் படி பிரிவு மாற்றம் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **மேற்படி சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் இருவர் மீதும் சட்டப் பிரிவு 379, 430 ன் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

பிரிவு 430 இதச எதற்காக பதிவு செய்தேன் என்றால் ஆற்றின் வளத்தை பாதிக்க கூடியதாக இருப்பதால் அந்த சட்டப் பிரிவில் வழக்கு பதிவு செய்தேன். நான் ஆற்றுக்கு சென்று அங்கு எங்கு எப்படி பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று பார்வையிட்டு பார்வை மகசரோ வரைபடமோ தயார் செய்தேனா என்றால் இல்லை. இது தானாக முன் வந்து பதிவு செய்த வழக்கு என்பதால் அவ்வாறு பதிவு செய்துள்ளேன். ஆற்றை பார்த்தாக எனது விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எதிரியிடம் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மணல் 50 கிலோ என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சுமார் 50 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பொதுப்பணி துறைக்கு 20 கிலோ தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 0.02 யூனிட் கொடுத்தேன். இறுதியறிக்கையில் சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் யாரை விசாரிக்க சென்றபோது அவர்கள் முன்வரவில்லை என்றால் அவ்வழியில் சென்றவர்களை விசாரிக்க முயற்சித்தபோது அவர்கள் முன் வரவில்லை. எனது வழக்கு நாட்குறிப்பில் அவ்வாறு விசாரிக்க முயற்சித்தபோது ஆட்கள் யாரும் முன்வரவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வழக்கு நாட்குறிப்பு பற்றி சொல்ல இயலாது. இந்த வழக்கின் விசாரணையை எத்தனை மணிக்கு ஆரம்பித்து

எப்போது முடிக்கப்பட்டது என்றால் காலை 6.00 மணிக்கு ஆரம்பித்து எத்தனை மணிக்கு முடிக்கப்பட்டது என்று சரியாக தெரியவில்லை. இவ்வழக்கில் நான் தான் புகாரர்தாரர் மற்றும் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரியின் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அலுவல் ரீதியாக அழுத்தம் மேல் இடத்தில் இருந்து இருந்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கனிம வள துறைக்கு இந்த வழக்கு சம்பந்தமாக தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரியின் மீது தவறான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தடய பொருட்கள் அனைத்தும் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையே, 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**